**கட்டான பிரதேச சபை**

**கம்பஹா மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காக சமர்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 09 இல் சபையின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து கட்டான பிரதேச சபையின் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி சார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுகள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு கொள்கைகள்

நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பின் போது சபைக்குசொந்தமாக உருவாக்கப்பட்ட வருமானம் இல்லாத முத்திரைத் தீர்வைகள், நீதிமன்ற தண்டப்பணம் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யும் கொள்கை இருந்த போதிலும் கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 20,760,391 மற்றும் முத்திரைத் தீர்வைகள் ரூபா 89,994,273 அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

#### 1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ)** மீளாய்வாண்டில் கிடைக்கவேண்டிய, உரிமை முதல், நடைமுறை பொறுப்பு ஆகிய ஐந்தொகை உருப்படிகளுக்காக கொடுக்கப்பட்ட குறிப்புக்களின் பெறுமதியும் ஐந்தொகையில் உள்ள பெறுமதியையும் பார்க்கும் போது ரூபா 184,445 வேறுபாடு காணப்படுகின்றது.

**(ஆ)** மீளாய்வாண்டில் நன்கொடையாக கிடைத்த ரூபா 27,310,000 பெறுமதியான நிலையான சொத்துக்கள் மூலதன ஈடுபடுத்தலுக்கான மானியப் பங்களிப்புக் கணக்கிற்கு பதிலாக மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

**(இ)** மீளாய்வாண்டில் இறுதித் திகதிக்கு பௌதீக இருப்பு கணிப்பீடு செய்து இறுதித் தொகையை கணக்கீடு செய்ய வேண்டியபோதும் ஆயுள்வேத வைத்தியரிடம் எடுக்கப்பட்ட அறிக்கையை அடிப்படையாக கொண்டு ஆயுள்வேத மருந்துகளுக்கு இறுதி மீதி ரூபா 702,463 ஆக கருதப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**(ஈ)** மீளாய்வாண்டில் டிசம்பர் 31 ஆந் திகதிக்கு ரூபா 555,229 முற்கூட்டி பெற்ற முற்பணம் மீதிக்குள் 11 வேலைத்திட்டங்களுக்கான ரூபா 142,324 தீர்க்கப்பட்டிராத முற்பணம் உள்ளடங்கியுள்ளது. இந்த முற்பணம் 1997,2001 மற்றும் 2002 ஆண்டுகளில் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் இந்த பெறுமதி மீள தீர்க்கப்படாது என சபையினால் இனங்காணப்பட்டிருந்த போதிலும் இன்னும் முற்பணமாகவே கணக்கீட்டில் காட்டப்பட்டிருந்தது.

**(உ)** 2015 டிசம்பர் 31 ஆந் திகதிக்கு ரத்தொழுகம உபஅலுவலகத்திற்கு சொந்தமான வங்கி கணக்கின் வங்கி கூற்றின்படி வங்கி மீதி ரூபா 909,285 ஆக உள்ள போதிலும் தயாரிக்கப்பட்ட வங்கி

இணக்க கூற்றுப்படி அந்தத் திகதிக்கு வங்கி மீதி ரூபா 989,037 ஆக காணப்பட்டுள்ளன. ரூபா 79,752 வேறுபாடு வங்கி இணக்க கூற்றில் சரியாக திருத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஊ)** தொடர்ச்சியாக வரும் ரூபா 18,730 க்கு தொங்கல் கணக்கு வரவு மீதி வருமான முற்பணத்தில் கழித்துக்காட்டப்பட்டமையினால் முற்பண வருமானம் குறைவாக காட்டப்பட்டுள்ளது.

(எ) மீளாய்வாண்டில் நிதி கூற்றுக்களின்படி கையில் உள்ள இருப்புக்கள் ரூபா 4,210,970 ஆக இருந்த போதிலும் உபபேரேடு மற்றும் புத்தகத்தின்படி மீதி ரூபா 5,594,565 ஆக காணப்பட்டமையினால் ரூபா 1,383,595 வேறுபாடு காணப்படுகின்றது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ)** 2000, 2006, 2007, மற்றும் 2011 ஆண்டுகளில் ஓய்வூதியம் பெற்ற, வேலையில் இருந்து நீங்கிய மற்றும் இறந்த 4 ஊழியர்களிடம் அறவிடவேண்டிய ரூபா 115,226 பெறுமதியான ஊழியர் கடன் நிலுவை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை.

**(ஆ)** மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆந் திகதிக்கு சென்மதியாளர் இறுதி மீதியில் உள்ள 2013 ஆண்டுக்கு தொடர்பாக ரூபா 2,554,130 உம் 2014 ஆண்டுக்கு தொடர்பான ரூபா 36,533,465 உம் தீர்ப்பனவு செய்ய எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் தொடர்ச்சியாக காணப்பட்டுள்ளது.

### 1.3.4 கணக்காய்வு சான்றின்மை

கூட்டுமொத்தத்தொகை ரூபா 10,693,947 இரு கணக்கீட்டு விடயங்களுக்கான பேரேடு மற்றும் விபரமான உபபேரேடு சர்ப்பிக்கப்படாமையினால் அது கணக்காய்வில் முறையாக கணக்காய்வு செய்யமுடியாதுள்ளது.

### 1.3.5 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

2015 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 9 கணக்கீட்டு விடயங்கள் தொடர்பாக கணக்குகளுக்கும் மற்றும் உப பேரேடுகளுக்கும் இடையே ரூபா 1,992,541 வேறுபாடு காணப்பட்டுள்ளது.

### 1.3.6 அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்

**(அ)** பொது நாட்குறிப்பேட்டு இலக்கம் 29 இன் பிரகாரம் ரூபா 22,789,700 அனுமதி பெற்றிராது திரண்ட நிதிக்கு செலவு செய்யப்பட்டிருந்தது.

**(ஆ)** பொது நாட்குறிப்பேடு இலக்கம் 9,10 இன் பிரகாரம் மறுக்கப்பட்ட காசோலைகள் ரூபா 17,390 உம் மோசடி செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த காசு மீதி ரூபா 16,127 உம் முறையாக அனுமதியின்றி பதிவளிக்கப்பட்டிருந்தது.

**(இ)** 2015 டிசம்பர் 31 ஆந் திகதிக்கு பெறுமதி சேர் வரி கணக்குகளில் உள்ள 6,901,798 பெறுமதியான மீதி பொது நாட்குறிப்பேட்டில் இலக்கம் 8 இன் பிரகாரம் திரண்ட நிதிக்கு குறிப்பிட்ட பெறுமதி இனங்காணப்படாது பதிவளிக்கப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2015 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 71,737,440 ஆக விளைந்திருந்ததுடன் ஒப்பிடும் போது நேரொத்த முன்னைய ஆண்டில் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 72,968,988 ஆக விளைந்திருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்

**(அ)** மீளாய்வாண்டிற்கும்,கடந்த ஆண்டிற்கும் சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், உண்மை வருமானம் மற்றும் கிடைக்கவேண்டிய வருமானம் என்பவற்றின் விபரம் வருமாறு.

| வருமான விடயம் | பாதீடு (ரூபா) 000' | உண்மை (ரூபா) 000' | டிசெம்பர் 31 மொத்த நிலுவை (ரூபா) 000' |
|---|---|---|---|
| ஆதனவரி மற்றும் பற்றாணைச் செலவுகள் | 45907 | 53,340 | 35,529 |
| வாடகைகள் | 819 | 1,121 | 41 |
| வியாபார உரிமங்கள் | 695 | 947 | - |
| ஏனைய வருமானம் | 23,068 | 10,430 | 35 |
| மொத்தம் | 70,489 | 65,838 | 35,605 |

### 2.2.2 ஆதன வரி

கட்டான பிரதேச சபைக்கு சொந்தமான ரப்தொளுவை உப அலுவலகத்தின் ஆதன வரி அலகு 13324 உம், தெமகன் கந்திய உப அலுவலகத்தின் ஆதனவரி அலகு 26462 உம் கட்டான உப அலுவலகத்தின் ஆதனவரி அலகு 14058 உம், ஆடிஅம்பலம் உப அலுவலகத்தின் ஆதனவரி அலகு 11715 உம், ஆதன வரி பதிவேடு ஒன்று பராமரிக்கப்படாமல் இருந்தமையும் மற்றும் கிடைக்கவேண்டிய ஆதனவரி நிலுவைக்கான காலப்பகுப்பாய்வு எடுப்பதற்கும் இயலவில்லை.

### 2.2.3 காணி விற்பனைக்கான கட்டணம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ)** 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்கம் ஆகிய பிரதேச சபை சட்டத்தின் 154 பந்தியின் பிரகாரம் உண்மையான விற்பனைப் பெறுமதியை அடிப்படையாகக்கொண்டு வரி அறவிடவேண்டியிருந்த போதிலும் காணி விற்கும் 7 கம்பனிகளுக்கு காணி பிரித்து விற்பனை செய்திருந்த போதிலும் உண்மையான விற்பனை விலைக்கு வரி அறவிடுவதற்கு சபை தவறியுள்ளது.

**(ஆ)** தெமகன்கந்திய தேக்கவத்த ஏலவிற்பனை செய்த காணியில் சமுர்த்தி, குடும்ப சுகாதார நிலையம் மற்றும் கிராமசேவையாளர் காரியாலயம் இருந்த போதிலும் அதில் சபைக்கு கிடைத்த வருமானம் பற்றிய விபரம் கணக்காய்வுக்கு வகைப்படுத்த முடியாதுள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல் மதிப்பீடு

2015 ஆம் ஆண்டு செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ள 33 செயற்பாடுகள் மீளாய்வாண்டில் செயற்படுத்தப்படவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ)** மீளாய்வாண்டில் பிரதேச சபையில் சராசரி மாதாந்த காசு மீதி ரூபா 12,952,908 காணப்பட்டமையினால் இத்தொகையை முதலீடு செய்வதற்காக சபையினால் பார்வை செலுத்தப்படவில்லை.

**(ஆ)** 2015 மார்ச் 20 ஆம் திகதிக்கு ரூபா 28,000 செலவு செய்யப்பட்டு ரத்தொழுவ வீடமைப்பு திட்டத்தில் உள்ள இடத்தில் அபாயமான பெரிய மரம் வெட்டி அரச மர கூட்டுத்தாபனத்திற்கு கொண்டு செல்லப்பட்டிருந்த போதும் 2016 யூன் 30 ஆந் திகதி வரைக்கும் அதற்கான எந்தவிதமான தொகையும் சபைக்கு கிடைக்கவில்லை.

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

#### 3.3.1 பிளாஸ்ரிக் வாளி கொள்வனவு செய்யப்பட்டமை

2015 பெப்ரவரி மாதத்தில் ஒன்றின் விலை ரூபா 300.79 ப்படி 5924 பிளாஸ்ரிக் வாளி கொள்வனவுக்காக ரூபா 1,999,720 தொகை இலங்கை வியாபார கூட்டுத்தாபனத்திற்கு கொடுப்பனவு செய்திருந்தது. அது சம்மந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன.

(i) 2015 மார்ச் 27 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்தசபை கூட்டத்தில் இக் கொடுப்பனவு செய்வதற்கு தேவையான அனுமதியை பெறுவது நல்லது என ஏற்றுக்கொண்டபோதிலும் அவ்வாறு அனுமதி பெற்றுக்கொள்ளப்படவில்லை.

(ii) மேற்படி கொள்வனவு செய்யப்பட்டு 08 மாதத்திற்கு பின்னர் 2015 ஒக்டோபர் மாதத்தில் பிளாஸ்ரிக் வாளி ஒன்று வாங்குவதற்கு ரூபா 250 ப்படி பெறுமதி சேர் வரி இல்லாத பெறுமதிக்கு கட்டான கூட்டுறவுச் சங்கத்தில் வாங்கியிருந்தனர். 2015 பெப்ரவரி மாதத்தில் கொள்வனவு செய்யும் போது கட்டான கூட்டுறவு சங்கத்தில் விலை கேட்கப்படாமல் இருந்தமையால் விலை கோரப்பட்டு கொள்வனவு செய்திருந்தால் ரூபா 301,498 சபைக்கு சேமிக்கக்கூடிய வாய்ப்பு இருந்தது.

### 3.4 ஒப்பந்த நிர்வாகம்

**(அ)** மகாகுனுப்பிட்டிய நுகவல வீதியில் பிரதேச சபை காணியில் பொது நோக்குடைய கட்டிடத்தின் 4 வது கட்டம்

மேற்படி ஒப்பந்தம் செய்வதற்கு பிரதேச சபை செயலரினால் ரூபா 993,666 பெறுமதியானவைக்கு 3 மாத காலத்தில் ஒப்பந்தம் முடிப்பதற்காக ஒப்பந்த நிறுவனமொன்றுடன் 2015 நவம்பர் 17ம் திகதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது.

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ஒப்பந்ததாரர் வேலைகள் 80 வீதம் முடிக்கப்பட்டிருந்தது என அறிவித்திருந்த போதிலும் இது பூரணமான கட்டடம் ஆகியதால் 4 வது கட்டத்தில் வேலை செய்யப்படவேண்டிய அளவில் முடிக்கப்பட்டிராத போதும் அது பற்றி பொறுப்பு வாய்ந்த அலுவலர்கள் கவனிக்காது இருந்துள்ளார்கள்.

(ii) கட்டான பிரதேச சபையின் உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் 2016 மார்ச் 29ம் திகதி 20 வீதம் முற்பணம் கொடுக்கும் போது 17 நாட்களுக்குள் ஒப்பந்தம் முடிக்க கூடியதா என ஒப்பந்ததாரருடன் உடன்படிக்கை மேற்கொண்டு அறிவித்திருந்தபோதிலும் அதற்கெதிராக 2016 மார்ச் 29 ம் திகதி ரூபா 198,733 க்கு முற்பணம் கொடுக்கப்பட்டிருந்தது.

(iii) ஆனாலும் கணக்காய்வுத்திகதி 2016 மே 16ந் திகதி வரைக்கும் ஒப்பந்தம் முடிவுறுத்தப்படவில்லை.

(iv) அதனால் மகா குனுப்பிட்டிய பொது நோக்குடைய கட்டடத்தில் 3 வது கட்டத்தில் வேலை முடிவடைவதற்கு முன்னால் 4 வது கட்டத்தில் வேலைக்கு ரூபா 198,733 கொடுப்பனவு

செய்தமையினால் ஒப்பந்தத்தில் 3 மற்றும் 4 ஆகிய இரு பிரிவுகளுக்குமான வேலைத்திட்டம் தாமதமாகியிருந்தது.

**(ஆ) செயற்திட்ட தாமதம்**

---------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டில் மேற்கொள்வதற்கு மதிப்பிடப்பட்ட 100 நாள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் ரூபா 69,718,727 பெறுமதியான 70 வேலைத்திட்டங்கள் முடிக்க முடியுமென எதிர்பாத்திருந்தனர் அதில் ரூபா 11,000,000 பெறுமதியான 12 வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்படவில்லை.

(ii) மீளாய்வாண்டில் ஒப்பந்தம் செய்யப்பட்ட ஒப்பந்தத்தில் ரூபா 2,696,766 பெறுமதியான 3 வேலைத்திட்டம் செய்யப்படாமலும் மற்றும் ரூபா 4,410,000 பெறுமதியான 3 வேலைத்திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

(iii) கட்டான பிரதேச சபை காணியில் வாகன தரிப்பிடம் நிர்மானிப்பதற்கு 2013 ஆம் ஆண்டில் ரூபா 483,905 தொகைக்கு ஒப்பந்ததாரருடன் சபைச் செயலாளர் ஒப்பந்தம் கைச்சாத்திட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு முடிவதற்குள் அவ் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.5 சுற்றாடல் பாதிப்பு**

---------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1980 இலக்கம் 47 ஆகிய தேசிய சுற்றாடல் சட்டத்தின் 26 பந்தியில் உள்ள நிபந்தனைகள் 2வது இணைப்பின் 4.1 பந்தியின் பிரகாரம் எல்லா மீள்புதிப்பித்தல் விண்ணப்பங்கள் சூழல் அனுமதிப்பத்திரம் முடிவடைய 3 மாதங்களுக்கு முன்னர் உள்;ராட்சி அலுவலகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்படவில்லை. மற்றும் அது பற்றி விசாரணை செய்யப்படவில்லை. மற்றும் வழங்கப்பட்ட காலம் முடிவடைந்தும் விண்ணப்பம் கொடுக்கப்படாது சூழல் அனுமதிப்பத்திரம் எடுக்காத 6 வியாபாரங்கள் உள்ளது என கணக்காய்வில் அவதானிக்கப்பிடருந்தது. இதனால் சபைக்கு கிடைக்கவேண்டிய வருமானம் எடுப்பதற்கு சபை அலுவலர்கள் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) இன்னும் மேலதிக நிபந்தனை 4.2 பந்தியின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு ஒரு மாதத்திற்கொரு தடவை மேற்படி வேலைகளுக்கான செயற்பாட்டு அறிக்கையை ஆராய்ந்து அறிக்கையிடவேண்டிய ஏற்பாடு ஆரம்பிக்கப்படவில்லை.

**3.6 வருடாந்த பெறுகைத் திட்டம்**

-----------------------------------------------

2016 மார்ச் 24 ஆம் திகதி இலக்கம் 128 இன் பிரகாரம் தேசிய பாதிட்டு சுற்றறிக்கைப்படி சபையினால் பெறுகைத்திட்டம் தயாரிக்கப்படவில்லை.

**4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

-----------------------------------------------

பின்வரும் விடயங்களில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கணக்காய்வு

(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஈ) வருமான நிர்வாகம்

(ஊ) சொத்து முகாமைத்துவம்